**C.C. No.** 47/2024 **Date : 27.02.2026**

**PW1 – மாரீஸ்வரி, க/பெ.ராஜேந்திரன்**

1,2,3 எதிரிகள் ஆஜர்.

1,2,3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 311 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரம் மாலை 6 மணி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து எனது வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 15 நிமிடத்தில் நடந்து செல்லும் தொலைவில் உள்ளது. நானும் என் கணவரும் தான் அப்போது கடைக்கு சென்றோம். நான் அளித்த புகார் மனுவில் நான் மட்டும்தான் கடைக்கு சென்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் ஆனால் என் கணவரும் என் உடன் வந்தார். நடந்ததாக கூறப்படும் சம்பவம் யார் வீட்டு முன்பாக நடந்தது என்றால் குருவம்மாள், சீதாலட்சுமி ஆகியோர் வீடுகளுக்கு முன்பாக நடந்தது.

2) நான் அளித்த புகார் மனுவில் சம்பவத்தின் போது பக்கத்தில் குடியிருக்கும் சீதாலட்சுமி மற்றும் குருவம்மாள் ஆகியோர் வந்து சத்தம் போட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி குருவம்மாள் மற்றும் சீதாலட்சுமி ஆகிய இருவரும் யாருடைய வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால், எதிரிகளின் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருகிறார்கள். நான் அளித்த புகார் மனுவில் எந்தெந்த எதிரி குறிப்பிட்டு என்னை தகாத வார்த்தையால் திட்டினார்கள் என்று கூறவில்லை என்றால் மூன்று எதிரிகளும் தான் என்னை திட்டினார்கள். என் முடியை பிடித்து இழுத்து எந்த எதிரி தாக்கினார் என குறிப்பிட்டு எனது புகார் மனுவில்

கூறவில்லை என்றால் அய்யம்மாளும், பெரிய அய்யம்மாளும் என் முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள்.

3) எதிரி செல்லப்பாண்டி என் தாலிகயிறைப் பிடித்து இழுத்து அத்துவிட்டார். எதிரி செல்லப்பாண்டி என் தாலிக்கயிறை பிடித்து இழுத்து அத்து விட்டதாக கூறும் சமயத்தில் எனக்கு காயங்கள் ஏதேனும் ஏற்பட்டு இருந்ததா என்றால், எதிரி என் தாலிக்கயிறை பிடித்து பின்னிருந்து இழுத்ததால் கயிறு எனது கழுத்தை இறுக்கி எனக்கு கடும் வலி ஏற்பட்டது. தாலிக்கயிறும் அறுந்து விட்டது. எதிரி செல்லப்பாண்டி என் தாலி கயிறை பின் இருந்து இழுத்தார் என்றும், அதனால் எனது கழுத்தில் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தையும் எனது புகார் மற்றும் போலீசாரிடம் அளித்த சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

4) நடந்ததாக கூறப்படும் சம்பவத்திற்கு பின்னர் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. காவல் நிலையத்திற்கு தான் சென்றேன். எனது நைட்டி கிழிந்து விட்டதால் எனது உடலின் பாகங்கள் வெளியில் தெரிந்தது. அதனால் எனது கணவர் அவரது சட்டையை எனக்கு கொடுத்தார். அதனை அணிந்து கொண்டுதான் காவல் நிலையத்திற்கு சென்றேன். மேற்படி விவரத்தை எனது புகார் மனு மற்றும் போலீசரிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என்னை எதிரிகள் தாக்கியதாக சொல்லும் சமயத்தில் என் கணவர் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் எதிரிகளை தடுக்க முயன்றும் அவரால் முடியவில்லை. என் மனைவியை விட்டுவிடுங்கள் என்று எதிரிகளிடம் கேட்டபோதும் எதிரிகள் என்னை விடவில்லை.

5) சம்பவத்திற்கு பின்னர் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால், சம்பவம் நடந்தவுடன் மாலை 5.30 மணிக்கு காவல்

நிலையத்திற்கு சென்றோம். புகார் மனுவினை யார் எழுதியது என்றால் நான் தான் புகார் எழுதினேன். யார் சொல்லி புகார் மனுவினை நான் எழுதினேன் என்றால், போலீசார் நடந்ததை எழுதுங்கள் என்று சொன்னார்கள். நானாக நடந்ததை எழுதினேன். நானும் என் கணவரும் இருசக்கர வாகனத்தில் காவல் நிலையத்திற்கு சென்றோம். எங்கள் வீட்டில் இருந்து எம்.புதுப்பட்டி காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் எவ்வளவு நேரம் ஆகும் என்றால், சுமார் ஒரு மணி நேரம் ஆகும். சண்டை எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் சுமார் 15 நிமிடம் நடந்திருக்கும்.

6) நான் சொன்னது போல் சம்பவம் சுமார் 15 நிமிடம் நடந்திருந்தால் மாலை 5.30 மணிக்கு நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி செல்லப்பாண்டி கையில் கத்தி எடுத்து குத்த வந்தார். அதனால் நாங்கள் பயந்து போய் அவசர அவசரமாக வண்டியில் காவல் நிலையத்திற்கு சென்று விட்டோம். செல்லப்பாண்டி எங்கிருந்து கத்தியை எடுத்து வந்தார் என்றால் அவரது வீட்டில் இருந்து எடுத்து வந்தார். சம்பவம் நடந்ததாக கூறும் இடத்திலிருந்து எதிரி செல்லப்பாண்டியன் வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் எதிரியின் வீட்டு வாசலில் தான் சம்பவம் நடந்தது. எனது வீட்டு பக்கம் கடை எதுவும் இல்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் கிராமத்தில் நிறைய ஆட்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கூடியதாக கூறப்படும் ஆட்களின் பெயரினை போலீசாரிடம் சொன்னேனா என்றால் தெரிந்த இரண்டு பெயரை மட்டும் கூறினேன்.

7) சாட்சிகள் சீதாலட்சுமி, குருவம்மாள் ஆகிய இருவரும் எனது உறவினர்களா என்றால் இல்லை தெரிந்தவர்கள். சம்பவத்தின் போது அறுக்கப்பட்டதாக கூறப்படும் தாலியையும் கிழிக்கப்பட்டதாக கூறப்படும்

நைட்டியையும் போலீசார் வசம் ஒப்படைத்தேனா என்றால் அறுந்த தாலியை போலீசாரிடம் கொடுத்தேன். அவர்கள் பார்த்துவிட்டு என்னிடமே கொடுத்து விட்டனர். அதனை வேறொரு கயிறில் கட்டி போட்டுக் கொண்டேன். கிழிந்திருந்த நைட்டியை நான் அணிந்திருந்ததால் அதனை கொடுக்கவில்லை. எதிரி செல்லப்பாண்டி அறுத்ததாக கூறப்படும் தாலியை எவ்வளவு தொலைவில் தூக்கி எறிந்தார் என்றால், தூக்கி எறியவில்லை கையோடு கொண்டு சென்றார். எதிரியிடம் எனது கணவர் கெஞ்சி அறுத்த தாலியை வாங்கி வந்தார். மேற்படி விவரத்தை எனது புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன்.

8) கடைக்கு சென்றதாக கூறும் சமயம் நான் நடந்து சென்றேனா என்றால், நடந்து தான் சென்றேன். எனது கணவர் எனக்கு முன்பாக இருசக்கர வாகனத்தில் சென்று கடையில் நின்று கொண்டாரா என்றால் இல்லை. என்னை கடையில் இறக்கிவிட்டு அங்கு நின்று கொண்டிருந்தார். எனது புகார் மனுவில் என்னை எனது கணவர் இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று கடையில் இறக்கிவிட்டு அங்கு நின்று கொண்டார் என்ற விவரத்தை சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். கடையில் நான் பொருட்கள் வாங்கிவிட்டு வரும்போது தான் எதிரிகள் என்னை வழிமறித்தார்கள் என்றால் சரிதான்.

9) 23.07.2023 அன்று எனது கணவர் மீதும் எனது அண்ணன் மீதும் எதிரி செல்லப்பாண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். எனது அண்ணன் மீதும் எனது கணவர் மீதும் எதிரி செல்லப்பாண்டி அளித்திருந்த புகாரின் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது அண்ணனுக்கும் எதிரி செல்லப்பாண்டியின் மனைவிக்கும் தொடர்பு ஏற்பட்டு

அவர்கள் இருவரும் சென்று விட்டதற்கு நான்தான் காரணம் என்று சொல்லி இருந்தனர். நான் சொன்னது போல் சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்தில் இருந்து 15 நிமிடத்தில் இருசக்கர வாகனத்தில் காவல் நிலையத்திற்கு செல்ல வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கும் எதிரி செல்லப்பாண்டிக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகாரளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டு அருகிலேயே கடை இருந்தும் சுமார் 1.30 கி.மீ. தொலைவில் இருக்கக்கூடிய கடைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றும், நான் எதிரிகளிடம் சண்டை போடுவதற்காகவே எதிரிகளின் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் அளித்த பின்னர் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சென்றேன். நான் மருத்துவமனைக்கு சென்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேன்.

**C.C. No.** 47/2024 **Date : 27.02.2026**

**PW2 – ராஜேந்திரன், த/பெ.ராஜகோபால்**

1,2,3 எதிரிகள் ஆஜர்.

1,2,3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 311 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சமையல் வேலை செய்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரம் நான் எங்கு வந்தேன் என்றால் கடைவீதிக்கு வந்தேன். எனது வீட்டிற்கும் கடைவீதிக்கும் இடையே சுமார் 1.30 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். நான் கடைவீதிக்கு செல்வதற்கு முன்பாகவே எதிரிகள் வழிமறித்துவிட்டார்கள் என்றால், சரிதான். எதிரிகள் எங்களை வழிமறித்ததாக சொல்லும் சமயத்தில் நானும் என் மனைவியும் இருசக்கர வாகனத்தில் வந்தோம். எங்களது வண்டியை எதிரிகள் மறித்ததும் எதிரி செல்லப்பாண்டி என்னை அடித்துவிட்டார் என்றால் சரிதான். எதிரி செல்லப்பாண்டி எங்களை வழிமறிக்கும்போதே அவர் கையில் கத்தி இருந்தது என்றால் சரிதான். முதலில் எதிரி செல்லப்பாண்டி தான் எங்களை வழிமறித்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் தான் 2,3 எதிரிகள் வந்தனர் என்றால் சரிதான். எதிரி செல்லப்பாண்டி என் மனைவியின் நைட்டியை கத்தியை வைத்து தான் கிழித்தார் என்றால் இல்லை. கையால் இழுத்து கிழித்துவிட்டார்.

2) எதிரி செல்லப்பாண்டி நைட்டியை கிழித்த பின்னர்தான் என் மனைவியின் தாலியை அத்தார் என்றால், நைட்டியை பிடித்து இழுக்கும்போது தாலியும் அவரது கையில் வந்துவிட்டது. மேற்படி விவரங்களைத்தான்

போலீசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன். எதிரி செல்லப்பாண்டி என் மனைவியின் தாலியை பின்னிருந்து இழுத்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வேறு யாரும் விலக்கிவிட வரவில்லையா என்றால் குருவம்மாள், சீதாலட்சுமியும் வந்து விலக்கிவிட்டார்கள். சீதாலட்சுமி அப்போது எனது மனைவியிடம் சட்டை ஒன்றினை கொடுத்தார். அதனை என் மனைவி அணிந்துகொண்டார். சீதாலட்சுமி கொடுத்த சட்டையை என் மனைவி அணிந்து கொண்டுதான் காவல் நிலையத்திற்கு வந்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் மூவரும் எங்களை வழிமறித்ததும் சண்டையிட்டு மல்லுகட்டினார்கள் என்றால் சரிதான். எதிரிகள் என் மனைவியை அடித்ததாக சொல்வது சம்பந்தமாக மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் லேசான காயம் என்பதால் மருத்துவமனைக்கு செல்லவில்லை.

3) அறுத்ததாக கூறப்படும் என் மனைவியின் தாலியை எதிரி செல்லப்பாண்டி என்ன செய்தார் என்றால் அவர் கையில் வைத்திருந்தார். தாலியில் அணியப்பட்டிருந்த குண்டுமணி, தாலி போன்ற பொருட்கள் கீழே கிடந்தன என்றால் சரிதான். குண்டுமணி, தாலி போன்ற பொருட்களை கீழே கிடந்து நாங்கள் எடுத்துகொண்டோம். மாலை சுமார் 5.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றோம். சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 5 – 6 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. புகாரை யார் எழுதினார்கள் என்றால் என் மனைவிதான் எழுதினார். போலீசார் சொல்ல சொல்ல தான் என் மனைவி புகாரை எழுதினார் என்றால் சரிதான்.

4) சாட்சிகள் குருவம்மாள், சீதாலட்சுமி ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் இல்லை பழக்கமானவர்கள். அவர்களது வீடு எங்களது

வீட்டின் அருகில் தான் உள்ளது. சாட்சிகள் சீதாலட்சுமி, குருவம்மாள் ஆகியோர் எதற்காக கடைவீதிக்கு வந்தார்கள் என்றால் அவர்களது வீடு கடை வீதியில் தான் உள்ளது. எதிரி செல்லப்பாண்டி கையில் இருந்த தாலியை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்றால் சரிதான். எதிரி செல்லப்பாண்டி சம்பவ இடத்திலிருந்து ஓடும்போது வேறு எதுவும் சொல்லிக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வெட்டுவேன், குத்துவேன் என்றும், என் மனைவி ஓடி சென்றதற்கு நீங்கள் தான் காரணம் என்றும் சொல்லிச் சென்றார். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

5) எதிரி செல்லப்பாண்டி என்மீதும் என் மனைவியின் அண்ணன் மீதும் வழக்கு சம்பவத்திற்கு முன்பு காவல் நிலையத்தில் புகாரளித்துள்ளார் என்றால் சரிதான். எதிரியின் மனைவியும் எனது மனைவியின் அண்ணனும் ஓடிச் சென்றவர்கள் தற்போது எங்கு வசிக்கிறார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி செல்லப்பாண்டி என்மீதும் என் மனைவியின் அண்ணன் மீதும் காவல் நிலையத்தில் அளித்திருந்த புகாரினால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகாரளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் என்னையும், என் மனைவியையும் தாக்கி இருந்தால் நேரடியாக மருத்துவமனைக்கு சென்று என் மனைவிக்கு சிகிச்சை எடுத்திருப்போம் என்றாலும் உண்மையில் சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

CC.NO.47/2024

**Depositions of PW 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **ராமமூர்த்தி** | **Caste** | |
| **Father's Name** | **ராமசாமி** | **Calling** | |
| **Village** | **நடையனேரி** | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th Day of February 2026.

Signature of Witness.

**27.02.2026**

1,2,3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நடையனேரியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தேதி, மாதம், நேரம் ஞாபகம் இல்லை. எம்.புதுப்பட்டி போலீசார் நடையனேரி கீழ வீதிக்கு வந்து அங்கு சண்டை நடந்ததாகவும் அது பற்றி விசாரிக்க வந்திருப்பதாகவும் என்னிடம் தெரிவித்து தாங்கள் வந்ததற்கு சாட்சியாக ஒரு கையொப்பம் செய்து கொடுக்குமாறு கேட்டார்கள். அதன்படி கையொப்பம் செய்து கொடுத்தேன். மற்றபடி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும்

தெரியாது. பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

(சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக பகுதி பிறழ் சாட்சியம் அளிப்பதால் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

17.08.2023 ஆம் தேதி 21.40 மணியளவில் நான் நடையநேரி கடைவீதியில் வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த போது அங்கு வந்த உதவி ஆய்வாளர் வழக்கு சம்பந்தமான இடத்தினை என் முன்பாகவும், சாட்சி சசிகலா என்பவர் முன்பாகவும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அப்போது நானும் சசிகலாவும் பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் முருகனேரி செல்லும் சாலையில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன். கடைவீதிக்கு செல்லவில்லை. நான் சம்பவ இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது முருகனேரி செல்லும் சாலையில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.